உ

சிவமயம்.

அஞ்ஞானவழியை அகட்டிவிரட்டி

மேஞ்ஞானவழியை விரித்துக்காட்டும்

விகடவேடிக்கைப்

# பறையன் பாட்டு.

முதற் பாகம்.

மேட்டுப் பூச்சிப்பாட்டு,

ஆக்குப்பொடாடிப் பாட்டு.

இஃது

மதுரை வடக்காவணிமூலவீதி,

புக்ஷாப்

இ. ராமசாமிக்கோனாரால்,

...ரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்

...ப்பிக்கப்பெற்றது.

1923 அணா 1

...ஸ்டர் காபி ரைட்.

0-, IX
N23
180858

2900

உ

சிவமயம்.

அஞ்ஞானவழியை அகட்டிவிரட்டி,

மெஞ்ஞான வழியை விரித்துக் காட்டும்.

# விகட வேடிக்கைப்

# பறையன் பாட்டு.

காப்பு வெண்பா

சத்துச்சித் தானந்த சாட்சாத் பரம்பொருளோர்
வித்தா யிருந்துலக மீதினிலே—வைத்துப்
படைத்த மனுகுலத்தின் பாங்குரைப்பேன் கொம்பொன்
றுடைத்த கரிமுகன் தாள் உன்னி.

ஆண்டிப்பண்டாரம் என்ற வர்ணமெட்டு.

தீண்டக்கூடாதாம்! சாமி தொடக்கூடாதாம்! (தீ)
உயர்குலத்தோரே-ஞான-உணர்வுபெற்றோரே!
ஒட்டிக்கொள்ளுமா? தீண்டல் தொட்டுக்கொள்ளுமா? (தீ)
அயன்முகத்துப் பிறந்தோமென்ற சாத்தியமாய்ப் புழுகிவைத்தீர்
தயவுசெய்து கேட்பவைக்குத் தகுந்தவிடை தந்திடுங்கள்
தீண்டக்கூடாதா சாமி தொடக்கூடாதா (தீ)
பறையென்ற நாதத்திலே பகவான் எமைப்படைத்தார்
மறையென்ற வேதமுதல் மற்றவையை யாம்படைத்தோம் (தீ)
எழுவகைத் தோற்றங்களை ஈசன்எண்ணியே படைத்து
வாழுகின்ற அவற்றுள்மேலாய் மானுடரை யேவகுத்தான் (தீ)
மறையோர் மறையோரென்று மதிப்புவைத்துப் பேசுகிறீர்
குறைவாக எங்களைநீர் கூறுகின்ற ஞாயமென்ன ? (தீ)
அவமான மெத்தஉங்கள் அரியபெருங் கோத்திரத்தைத்
தவறாமல் சொல்லிவாரேன் சாந்தமாகக் கேட்டிடுங்கள் (தீ)
ஆதியிலே நாம்பிறந்தோம் அதன்பிறகே நீர்பிறந்தீர்
ஜாதியிலே நான்குவகை சாற்றுதற்கு ஞாயமுண்டோ ? (தீ)
புங்கனூர்ப் புலைச்சிபெற்ற புத்திரர்கள் பராசரரும்
அங்கவர்தம் பரம்பரையில் அவதரித்தார் [illegible]மே (தீ)

வேதங்களைப் புராணங்களை விதவிதமாய் எழுதிவைத்த
மேதகைய வியாசரெங்கள் மீன்வலைச்சி பெற்றபிள்ளை (தீ)

தேவகுரு வாம்வசிஷ்டர் தேவடியாள் வயிற்றுப்பிள்ளை
ஆவனுடன் சக்கிலிச்சிக் கானமணவாளனனர் (தீ)

வண்ணான்தன் வீட்டிலல்லோ வந்துதித்தார் நாரதரும்
எண்ணாமல் எங்களைநீர் ஏன்இழிந்து பேசுகிறீர் ? (தீ)

பராசரென்ற உங்கள்குரு பறையரென்று தெரிந்திருந்தும்
தராதலத்தில் மானுடர்க்கு ஜாதிசொல்ல வந்துவிட்டீர் (தீ)

அத்திரிமா முனியைப்பெற்ற ஆத்தாளொரு சக்கிலிச்சி
எத்தனையோ மகரிஷிகள் எங்கள்குலத் தேஜெனித்தார் (தீ)

சாத்திரங்கள் தொகுத்ததெவர் ? ஜாதிவகை வகுத்ததெவர் ?
கோத்திரங்கள் வகுத்தவரைக் கூப்பிடுங்கள் கேட்டிடலாம் (தீ)

கட்டழகி உங்கள்குலக் கன்னியாரி யப்பூமாலை
வெட்டியானை மணந்தகதை வெளியில்பேச வெட்கக்கேடு (தீ)

மெய்த்தமறை வேதமென்று மேதினியில் நிலைத்திருக்க
வைத்ததிருக் குறளுரைத்த வள்ளுவனு ரெந்தக்குலம் (தீ)

உங்களவர் வீற்றிருக்க உரியசங்கப் பலகையது
எங்கள்குல வள்ளுவரை ஏற்றதென்ன காரணங்காண் ? (தீ)

பங்கயனே வள்ளுவர்காண் பாண்டிவள மாமதுரைச்
சங்கத்தமிழ்ப் புலவர்கள்நூல் சகலத்தையும் படித்திடுங்கள் (தீ)

சாதியிரண் டேயொழியச் சாற்றுதற்கு வேறுமுண்டோ
மேதினியில் தருமஞ்செய்தார் மேலான சாதியாண்டே (தீ)

ஆதியிலே எங்களோடு ஆடுமாடு தின்றுவிட்டுப்
பாதியிலே யேல்கீழென்று பாடுவது பரிகாசமே (தீ)

அந்தணரும் பறையரும்முன் அண்ணன்தம்பி யாய்ப்பிறந்தோம்
பந்துத்துவம் மறந்துநீங்கள் பலகதைகள் பாடுகிறீர் (தீ)

எங்களுடன் பிறந்தநீங்கள் எங்களையே தூஷிப்பதால்
தங்கள்குலத் துரோகரென்று தாரணியோர் தூற்றுகிறார் (தீ)

பாப்பாரச் சேரியென்றும் பறையருட சேரியென்றும்
மூப்பான பெரிவர்கள் முறைவகுத்தார் உலகத்திலே (தீ)

காராம் பசுவறுத்துக் கறிசமைத்துத் தின்றகதை
ஊரார் சிரிக்கிறாரே உங்களுக்கேன் வெட்கமில்லை ? (தீ)

ஆடுதின்னும் பழக்கத்தினால் யாகம்பல செய்யும் நீங்கள்
மாடுதின்னும் பறையனென்று மானங்கெட்டுப் பேசாதீர்கள் (தீ

180858

"தீட்டுதீட்டு" என்றுசொல்லித் திருட்டுதன மாகநீங்கள்
மாட்டுக்கறிக் காசைப்பட்டு மந்த்ரவேள்வி செய்யவேண்டாம் (தீ)

ஒருபனை இரண்டுபாளை ஒன்றுநொங்கு ஒன்றுகள்ளு
அறிவினி லறிந்தவர்க்கு அதுவுமிதுவுங் கள்ளுத்தானே (தீ)

சுடலையிலே எங்களோடு சூழ்ந்துகுடி யிருந்துவரும்
கடவுளரைக் காண்பதற்கா கட்டுமந்த்ர மோதுகிறீர் ? (தீ)

ஓதிஓதிக் கதறிட்டாலும் உருண்டுருண்டு பிரண்டிட்டாலும்
பாதிமதி அணிந்தசிவன் பறையனல்லோ பாப்பனரே! (தீ)

கோத்திரத்தைப் பிடித்துவந்தால் கூறும்அண்ணன் தம்பிகள்நாம்
சாத்திரத்தைப் படித்தறிந்தால் சாதிவகை ஏதிங்காண்டே (தீ)

வேம்புசந்த னமிவைகள் வேறுவேறு மணங்கமழும்
சாம்பிணங்கள் சுட்டெரித்தால் தாங்கமழும் நாற்றமொன்றே (தீ)

பழமொழியொன் றுண்டிங்கது பாப்பார்க்கு மூத்தபறை
உளவறிந்து பார்த்திடாமல் ஓதுகிறீர் ஜாதிபேதம் (தீ)

நிலமுழுது பயிர்கள்செய்து நெல்லுபில்லு நாங்கள்தாரோம்
குலமுழுதும் உண்டுண்டுபின் குறைகள்செப்பித் திரியலாமா ? (தீ)

சாப்பிடுவ தெங்கள்சோறு சமைப்பதும்யாம் தொட்டதண்ணீர்
காப்பிக்கடைக் குள்நுழைந்தால் காணலாமே அதிசயங்கள் (தீ)

தொப்பிசட்டை மாட்டிக்கொண்டு துரைகளோடு கூடிக்கொண்டு
ஒப்புடனே மாட்டுக்கறி உண்பதுமோர் அதிசயமே! (தீ)

தொடக்கூடாதாம் ஆண்டே தீண்டக்கூடாதாம்
பறையனும்நானே கேளும் பகருவன்தானே—ஐயா (ப)

பிர்மத்தைக் கண்டவரே பெரியகுலப் பிராமணர்கள்
கர்மத்தொழில் புரியும்நீங்கள் கண்டதென்ன கொண்டதென்ன ?

உங்கள்மீது குறைகள்ஏதும் ஓதுதற்கு வழியொன்றில்லை
எங்களவர் தவறுதலால் இந்தவிதம் வந்துதாண்டே (தொ)

ஐந்துமுனை யால்உலகை ஆதரிக்கும் பிராமணர்கள்
மந்தங்கொண்டு தூங்குவதால் வந்துதலை காட்டுகிறீர் (தொ)

பையப்பையப் பல்லைக்காட்டிப் பரிந்துபல குறைகள்செப்பி
ஐயமெடுத் துண்பதினால் ஐயரென்ற பேருமக்கு (தொ)

வீம்புபல பேசிடுவீர் வெட்டியானை ஏசிடுவீர்
பாம்புபோலும் விஷமுளதால் பாப்பாரென்ற பேருமக்கு (தொ)

மாப்பிளைபெண் …ாருத்தம்பார்த்து மணமுடித்து வைத்துவரும்
பாப்பனரே உங்க…வீட்டில் பஞ்சமில்லை விதவையர்க்கு (தொ)

செத்தவர்க்கு மோட்சமீயச் சிரார்த்தகர்மஞ் செய்துவரும்
உத்தமரே உங்கள்வீட்டில் ஓயுதில்லை விதவைக்கூட்டம் (தொ)

அவஸ்தைப்பட்டு வியர்வைசிந்தி யாம்தேடிய பொருளைக்கொண்டு
சமஸ்கிருதப் பள்ளிக்கூடம் தந்திரமாய்க் கட்டிக்கொண்டீர் (தொ)

ஐம்பொன்மே லாசைவைத்த ஐயமாரே உங்கள் குலக்
கைம்பெண்கள் பள்ளிக்கூடம் கவர்ன்மெண்டாரே கட்டிவிட்டார்

நாடறிய மேலவர்மே ஞட்டாரெங்கு லத்தவர்க்கு
ஓடியோடிப் பெண்கொடுத்தீர் உமக்கிதிலே பெருமைமெத்த ()

வேற்றுமையை நிலைநிறுத்த வீம்புகொண்டு திரிகின்றீர்கள்
சாற்றுகிறேன் உங்களைநான் சந்தியிலே இழுத்துவைப்பேன் (தொ)

தேசபத்தர் போலவந்து தெருத்தெருவாய்ப் பேசுகிறீர்
யாசிக்கிற உங்கட்குப்பே ராசைமட்டும் ஓயவில்லை (தொ)

இந்தியா தேசத்திலே யாங்கள்பெற்ற ஒற்றுமையை
தந்துசெய்து கெடுக்கவேண்டாம் சந்தியிலே இழுத்துவைப்பேன்

தனித்ததமிழ்ப் பாஷையிந்தத் தாரணியில் முதற்பிறந்த
ஜெனித்தபல பாஷைபின்னர் செ…தமிழின் உதவியினல் (தொ)

பத்தோடெட்டுப் புராணங்களும் பகருவேத சாஸ்திரமும்
முத்தமிழி லிருந்துவட மொழியிலேநீ ரெழுதிக்கொண்டீர் (தொ)

வேடர்குல வான்மீகியார் விரும்பிச்செய்த ராமாயணம்
நாடறியும் தமிழைப்பார்த்து நவின்றதென்றே தெரிந்துகொள்வீர்

சங்கத்தமிழ்ப் பாஷையிலே தாழ்ந்தவட மொழியைச்சேர்த்து
மங்கிடாமல் இருக்கவல்லோ மணிப்பிரவாளம் எழுதிவைத்தீர் ()

எட்டுவழக் காகவேதான் இருந்துபட்ட வடமொழியைப்
போட்டியுடன் தமிழினுடு பொருத்துதற்கு ஞாயமென்ன? ()

பாடிவைத்த வேதம்தமிழ்ப் பாஷையிலே கிடையாதென்றீர்
ஆடுமாடும் பேசுவது அம்மாவென்ற தமிழ்மொழிகாண் (தொ)

எங்களைநீர் பறையரென்றீர் இலக்கணநூல் திணைவகுப்பில்
உங்களைமற் றஃறிணையில் ஒருங்குசேர்த்தார் அகத்தியரும் (தொ)

அகத்தியரும் ஆடுதின்றூர் கௌசிகரும் மாடுதின்றூர்
சிவத்தையறிந் தவனேஇந்தத் தேசத்திலே பிராமணன்காண் ()

மாலையிலேமலர் என்றுசிந்து வர்ண மெட்டு.

கேட்டிடுவீர் ஆண்டமாரே—நான்சொல்வதுபா
ராட்டிடுவீர் ஆண்டமாரே (கே)

தோட்டியென்ற எங்களுடன் கூட்டுமுறை பேசிமுனம்
மாட்டுக்கறி தின்றுமேவந்தீர் கொளுத்திட்டவெள்
ளாட்டுக்கறி தின்றுமேவந்தீர் எங்கள்

பாட்டியாம ருந்ததிதா னூட்டியுங்களை வளர்க்கத்
தாட்டீகமாய்த் தான்வளர்ந்திட்டீர் மறந்துவிட்டுப்
போட்டியிட வேதுணிந்திட்டீர் பெரியசண்டை
மூட்டிவிட வேதுணிந்திட்டீர் (கே)

பாப்பனர்க ளென்பதற்குத் தார்ப்பரிய மேதெரியீர்
சாப்பிடுதற் கேதெரிந்திட்டீர் வயிறுறவுண்டு
ஏப்பமிட வேதெரிந்திட்டீர் உற்ற

மூப்புமக்கு நாங்களென நாப்பறையிட் டார்கபிலர்
சீப்படுதற் கேதுணிந்திட்டீர் பறையரென்று
கூப்பிடுதற் கேதுணிந்திட்டீர் தெருத்தெருவாய்க்
காப்பிக்கடைக் கேதுணிந்திட்டீர் (கே)

பொய்யுரை வியாசமுனி செய்முறையி லேவலது
கையிழந்து போனதுமேனோ? இலாதுசொல்லி
மெய்ம்மறந்து போனதுமேனோ? இந்த

வையகத்தி லேயுமக்கு உய்யவழி வேறிலையா
ஐயமெடுத் துண்டிடலாமா? இகழ்ச்சியென்ற
தையல்மொழி அண்டிடலாமா? பற்கள்தெரியப்
பையவும்வாய் மென்றிடலாமா? (கே)

ஈந்தவருயர்குலங்கை யேந்துபவர் தாழ்குலமென்
றுய்ந்துமறையும் ஓதுதே! வள்ளுவர்குறள்
போந்தநெறியும் ஓதுதே! நீங்கள்

சாந்தனையு மேயுமக்கு வாய்ந்தபடி யாங்களிட்டும்
பாந்துவத்தை யேமறந்திட்டீர் செய்திட்டநன்றி
யாந்தகைய தைமறந்திட்டீர் வேதமிதெனத்
தேர்ந்துபொய்க்க தைபுகன்றிட்டீர் (கே)

# விகடவேடிக்கைப் பறையன்பாட்டு.

சத்தசாக ரமூலகனைத்துமேப சுவிடத்தில்
ஒத்திருக்கு தென்றிசைக்குறீர் உயிருடன்வ
தைத்திடம னஞ்சகிக்குறீர் கேளும்

செத்தபின்ன ரேயதைப்பு சித்துவரு மெங்களைய
சுத்தகுல மென்றுரைக்குறீர் நீங்கள்மட்டும்
சுத்தகுல மென்றுரைக்குறீர் பிழைப்புக்காக
நித்தநித்தம் பொய்யுரைக்குறீர்

தட்டிக்கேளா விட்டால்தம்பி கெட்டிக்காரன் மெத்தமெத
அட்டகாசன் என்பதுபோல அநேககதை
கட்டிவிட்டீர் கண்டதுபோல உம்மைத்

தொட்டுவிட்டால் தீண்டல்வந்து ஒட்டிக்கொள்ளு மாரகஸ்யம்
பட்டப்பக லாத்தெரிந்ததே முன்நீங்கள் செய்த
நட்டணையெ லாம்பறந்ததே ஒழுக்கங்கெட்டுச்
சட்டைதொப்பி யேசிறந்ததே (கே)

தந்ததந்த தந்ததந்த தந்ததானன்.

சங்கம்தங்கும் மதுரைமேலக் கோபுரவீதி என்றமெட்டு.

பிர்ம்மவம்ஸத் தேஜனித்த பிராமணர்களே—நம்
பிறவித்தோற்றம் பேசிவாரேன் பேணுவீர்களே (பிர்)

கர்மத்தாலே உருவடைந்தோம் கருக்குழியிலே—பல
கஷ்டப்பட்டு வந்தமே ஒருவழியிலே (பிர்)

ஸ்மிருதிகள்பதி னெட்டுனுள்ளே மனுஸ்மிருதியே-வெகு
ஸ்ரேட்டமென்று சொல்லிவைத்தார் அதுவும் நீதியே (பிர்)

மனுஸ்மிருதியின் படியேவந்த வகையையொப்புவீர்-நீர்
மட்டுமெத்த உயர்ந்ததெந்த வாறு செப்புவீர் (பிர்)

நான்குவர்ணத் தார்க்குத்தந்தை நால்வர்தாமுற்றார்-அந்
நால்வரைச் சுவாயம்பென்ற நன்மனுவா பெற்றார் (பிர்)

என்வகுத்தீர் ஜாதி நம்மை ஈன்றதந்தையார்-அவ
ரெப்படியும் ஒருவருக்கே ஏற்றபிள்ளைமார் (பிர்)

நாம்—பெரியப்பன்சிற் றப்பன்மக்கள் பேதமேயேது?- ஆம்
பின்னர்வந்த வியாசர்செய்த பேய்த்தனமீது (பிர்)

தெரியச்சொன்னேன் பாட்டன்நமக்குத் தேரிலொருவனே—நும்
கெட்டில்பாதி சீவல்கோடு சென்றுபெறுவனே (பிர்)

# மோட்டுப் பூச்சிப் பாட்டு.

கண்ணிகள்.

டிபொறுக்கமாட்டேன்—மூதேவித்தனமுள்ள (மூ)
யாலடியும் சவுக்கினாலடியும்
ம்படியும் பொறுத்திடமுடியும் (மூ)
கையினுள்ளே பதுங்கிக்கொண்டிருந்து
க்கென்று கடித்திட்டு வேகமாய் ஓடுறாய் (மூ)
லெல்லாம்பாடுகள் பலபலபட்டுநான்
கழுடன் தூங்கையில் சுறுக்கென்றுகடிக்கிறாய் (மூ)
இரவிலோபகலிலோ ஏமாந்திருந்திட்டால்
இடுக்குக்குளிருந்துநீ வெடுக்கென்றுகடிக்குறாய் (மூ)
நித்தமும்பால்தயிர் நெய்யுண்டுபெருகிய
ரத்தத்தைக்குடித்துநீ நசுக்குண்டுசாகுறாய் (மூ)
இரக்கமில்லாதஉன்னை எடுத்துடன்நசுக்கினால்
அரக்கர்தங்குலத்தைப்போல் அதிகமுண்டாகுறாய் (மூ)
கட்டில்மெத்தையில் கதவினில்சுவற்றினில்
ஒட்டிக்கடித்துவிட்டு ஒட்டம்பிடிக்குறாய் (மூ)
தலையணைக்குட்சென்று தனித்தொளிந்திருந்துநீ
விலகிக்கடித்துவிட்டு வேகமாய்ஓடுறாய் (மூ)
நீசுகமாய்வாழ நினைத்தேயென்ரத்தத்தை
ஊசியைப்போல்குத்தி உறிஞ்சிக்குடிக்கிறாய் (மூ)
தன்னலங்கருதிய சமர்த்துப்பாப்பாரைப்போல்
உன்நலங்கருதியென் னுடல்ரத்தங்குடிக்கிறாய் (மூ)

# மூக்குப்பொடிப்பாட்டு.

தாத்தா தாத்தா கொஞ்சம் பொடிக்கொடு—ஏ கிழட்டுத்
தாத்தா தாத்தா கொஞ்சம் பொடிக்கொடு (தா)
தல்லாகுளத்துக்கண்மாய்த் தண்ணீரிலேகுளித்தேன்
தடுமன்பிடித்துக்கொண்டு சங்கடப்படுத்துது (தா)
செல்லூருக்கண்மாயிலே சென்றுநிதங்குளித்தேன்
சேராமல்மூக்கடைத்துச் சேட்டைமிகச்செய்யுது (தா)
ஆற்றுத்தண்ணீரிலின்று அதிகாலையிற்குளித்தேன்
ஆதலினாலென்மூக்கு அடைத்துக்கொண்டிருக்குது (தா)
ஜானகிராம்கடையில் தகுந்தபொடிவிற்கிறது
ஆனதாற்பட்டணம்பொடி அந்தக்கடையில்வாங்கு (தா)

முற்றிற்று.